# நமது ஈழநாடு

www.namathueelanadu.com



குரல் 04 மலர் 43 ஜனவரி 2024 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

*உழைப்பவனே பொருள் உலகைப் படைக்கிறான். மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்றான்.*

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# நெஞ்சங்களில் அகலவியலாத புலிப் பொங்கல்



தீபச்செல்வன்

பொங்கல் என்பது தமிழர்களின் வாழ்வில் பெருமொரு பண்பாட்டு நிகழ்வாகும். அதிலும் ஈழத் தமிழர்களின் வாழ்வில் போர்க்காலப் பொங்கல்கள் ஒரு புறத்தே நினைவில் வர, போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் செய்த புலிப் பொங்கல்களும் இன்னொரு புறத்தே நினைவில் வருகின்றன. நமது பண்பாட்டின் கூறுகள்தான் பண்டிகைகளாகவும் விசேட தினங்களாகவும் நம் வாழ்வை தொடர்கின்றன. நினைவுகூருதலும் கற்றுக்கொள்ளுதலும் வாழ்வை செழுமைப் படுத்துகின்றன. அந்த வகையில் மிகச் சிறந்த நேயமும் பண்பும் கொண்டவொரு பண்டிகையாக பொங்கல் உலகத்தில் கவனம் பெற்று வருகின்றது.

### பண்பாடு என்பது உயிர்மூச்சு

பண்பாட்டை மறந்த எந்தவொரு இனமும் இந்த பூமிப் பந்தில் நிலைத்ததில்லை. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் நிலைத்த அடையாளம். தொடர்பாடல், உளவியல், அடையாளம், மானுடவியல், நாகரிகம் என பல்வேறு கூறுகள் நிறைந்த பண்பாடு கால மாற்றங்களின் போதும் கால வளர்ச்சிகளின் போதும் மாறாமல் நிலைத்து நிற்கின்ற தனித்துவ இயல்பை கொண்டது. அது மாத்திரமில்ல, பண்பாடு ஒரு சமூகத்தின் ஒரு இனத்தின் வாழ்வியலை முழுமைப்படுத்துகின்ற ஒரு அறிவியலாகத்தான் ஆதிகாலத்தில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், பொங்கல் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். தைப்பொங்கலே தமிழ் புத்தாண்டாகவும் கொண்டாடப்படுகின்றது. ஆங்கில நாட்காட்டியின் அடிப்படையில் நாட்கள் நகர்ந்தாலும் ஈழத்தில் தமிழ் ஆண்டுப்படியே அனைத்துக் காரியங்களையும் செய்கின்ற பண்பாடு காணப்படுகின்றது. எத்தகைய போர்க் காலத்திலும் எறிகணைகள், குண்டு மழைக்கு மத்தியிலும் புதிய மண் பானை வைத்து பொங்கி சூரியனுக்கு படைத்துவிட்டு இடம்பெயர்கின்ற மக்கள் எமது மக்கள்.

### பேணி வணங்கப்படும் இயற்கை

பொங்கல் என்பது இரண்டு விதத்தில் முக்கியத்தும் பெறுகின்றது. அது தமிழ் மக்களின் பண்பாட்டுச் சிறப்பையும் மாண்பையும் எடுத்துரைக்கின்றது. தமிழர்கள் இயற்கையை தெய்வமாக வழிபடுகிறவர்கள். அத்துடன் பசுக்களையும் தெய்வமாக வழிபடுகின்ற கருணை கொண்டவர்கள்.

தைப் பொங்கலின்போது, பொங்கி சூரியனுக்கு படையல் செய்கிறோம். இந்த உலகம் சிறப்பாக நகர வேண்டும் எனில் இயற்றை சீராக இருக்க வேண்டும். இன்றைக்கு மனிதர்கள் இயற்கைக்கு எதிராக பல்வேறு செயல்களை செய்து, இயற்கை சீற்றங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றார்கள். பேரழிவுகள் இதனால் ஏற்படுகின்றன.இயற்கையை தெய்வமாக வழிபட்டு, இயற்கையை பேணினால் இத்தகைய சிக்கல்கள் ஏற்படாது என்ற படிப்பினையை பொங்கல் பண்டிகை உணர்த்துகிறது.

தமிழ் மக்களின் பண்பாட்டில் இயற்கையை பேணி வணங்குகின்ற செயற்பாடுகள்தான் நிறைந்திருக்கின்றன. இயற்கையை பேண வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய எண்ணங்களும் அறிவியலும்தான் தமிழ் மக்களின் வணக்க முறைகளின் பண்பாட்டு அம்சங்கள் எனலாம்.

அதில் முதன்மையானது தைப்பொங்கல் ஆகும். ஈழத்தில் பொங்கல் எப்படி? என்பதுதான் தமிழகத்தில் உள்ளவர்களதும் புலம்பெயர்ந்த மக்களதும் முக்கிய விசாரிப்பு. ஈழத்தில் வீட்டுக்கு வீடு இன அழிப்பு போரின் பலவிதமாக பாதிப்புக்கள். போரில் தாய் தந்தையை இழந்த குழந்தைகள், சிறுவர் இல்லங்களிலும் தெருக்களிலுமாக உள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடும் தாய்மார்கள் ஒரு புறத்தில் கண்ணீரும் கம்பலையாகவும் தெருக்களில் இருந்து போராடுகின்றனர். சிறைகளில் அரசியல் கைதிகள். ஒவ்வொரு பொங்கலுக்கும் கணவர் வருவார், அப்பா வருவார் என்று காத்திருக்கும் பெண்களும் குழந்தைகளும் இன்னொரு புறத்தில் துயர வாழ்வு வாழ்கின்றனர்.

### போர்க்களத்தில் புலிப் பொங்கல்

இவர்களின் வீடுகளில் பொங்கல் எப்படி இருக்கும்? இந்த மக்களின் பொங்கல் துயரப் பொங்கல்தான். இவ்வளவுக்கு மத்தியிலும் ஒரு வாழ்வை ஈழ மக்கள் வாழ்ந்துதான் ஆக வேண்டும். இத்தனை துயரங்களுக்கு மத்தியிலும் ஒரு பூ மலர்வதைப் போலவே ஈழ மக்கள் தமது பண்பாட்டு பண்டிகைகளும் அனுசரித்துச் செல்கின்றனர். 2009இற்கு முன்னரான காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் போர்க்களத்திலும் பொங்கல் செய்வார்கள்.

விடுதலைக்கான பொங்கலாக போராட்டம் நடந்த காலத்தில் புலிக் கோலமிட்டு, புதிய பானை வைத்து போர்க்களத்தில் பொங்கி தமிழ் பண்பாட்டை காத்தனர் விடுதலைப் புலிகள்.

இலங்கை அரசும் அதன் படைகளும் சிங்களப் பிக்குகளும் பொங்கல் நிகழ்வை தடைசெய்யும் வகையில், பல்வேறு முயற்சிகளை கடந்த காலத்தில் மேற்கொண்டமையை இங்கு நினைவுபடுத்த வேண்டும். குறிப்பாக ஈழச் சைவ ஆலயங்களில் பொங்கல் பொங்கும் போது அவற்றை குழப்பிய கசப்பான சில நிகழ்வுகளும் இடம்பெற்றள்ளன. சைவ ஆலயங்களை ஆக்கிரமிக்க முயல்கின்ற நில ஆக்கிரமிப்பாளர்கள், அந்தக் கோயிலின் வழிபாடுகள், பண்பாடுகளையும் தடுக்க முனைகின்றமை மிகப் பெரிய பண்பாட்டு உரிமை மறுப்பும் மீறலும் ஆகும்.



### ஈழத் தமிழர் வாழ்வில் இன்னல்கள் தீருமா?

இனியாவது தமிழர்களின் வாழ்வில் இன்னல்கள் அகல வேண்டும் என்று வேண்டியபடி பொங்குவோம். ஈழ மண்மீது உண்மையான வெளிச்சம் படர வேண்டும் என்று பொங்கி சூரியனுக்கு படையல் இடுவோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீள வீடு திரும்ப வேண்டும் என்றும் அரசியல் கைதிகளாய் சிறையில் வாழ்பவர்களுக்கு விடுதலை வேண்டும் என்றும் இறைஞ்சி பொங்குவோம். பசுக்களுக்குகூட பொங்கி, வழிபட்டு, உணவூட்டும் பண்பாட்டை கொண்ட தமிழ் இனம், இன்று சிறைகளிலும் தெருக்களிலும் வாடிக் கொண்டிருக்கின்றது. உரிமையை இழந்து, பண்பாட்டுக்காகவும் விடுதலைக்காகவும் போராடுகின்றது.

விடுதலையை வென்றெடுக்கும் போராட்டத்தையும் இனியெமது பண்பாடு ஆக்குவோம். அழிவுகளின் மத்தியிலும் பண்பாட்டுக் கூறுகளை கைவிடாதவர்களாய் வாழ்வோம்.

எமது இனத்தின் மொழி, பண்பாடு, நிலம், உயிரினங்கள் என்று அனைத்தையும் எத்தகைய சூழலிலும் பாதுகாத்து விடுதலையை வென்றெடுப்போம்.

பண்பாட்டு வழியிலும் போராட வேண்டிய நிலைக்கு ஈழத் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது. அப்படிப் பார்க்கையில், பொங்கலைக்கூட ஒரு ஆயுதமாக பண்பாட்டு எழுச்சியாக பொங்க வேண்டும். குமுறும் எமது மனங்கள் போல எத்தனை துயரத்தின் மத்தியிலும் பொங்கல் பானையும் பொங்கட்டும்.

### இன்றோ நெருக்கடிப் பொங்கல்

ஸ்ரீலங்கா அரசு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை உற்பவித்துள்ளது. இதனால் பெரும் செலவில் அரிசியையும் பானையையும் வாங்கி நெருக்கடிப் பொங்கலை செய்த நிலைக்கு இலங்கை மக்கள் தள்ளப்பட்டார்கள். அந்த நெருக்கடிகளைவிடவம் இன ஒடுக்குமுறையில் இருந்து ஈழத் தமிழ் மக்கள் இந்த மண்ணில் மீண்டெழத் துடிக்கிறார்கள் என்றால், அவர்களின் இயற்கையை போற்றி, வாழ்கின்ற பண்பாட்டை கொண்டவர்கள் என்பதும் ஒரு காரணம்தான். தமிழர்களின் தெய்வங்களும் வணக்க முறைகளும் அதன் மனிதாபிமானம் மற்றும் கருணை என்பனவும் இந்த உலகிற்கு மேன்மையான ஒரு பண்பாடாகத்தான் சேகரமாகியுள்ளது.

புதிய காலம் பிறக்கும் என்பது உலகப் பொதுமக்களின் நம்பிக்கை. தமிழர்கள் அதை பொங்கலில் இருந்து தொடங்குகின்றனர். உலகிற்கு இயற்கையை வழிபடவும் விலங்குகள்மீது நேயம் கொள்ளவும் கற்றுக்கொடுத்த ஒரு இனம், தம்மீது மேற்கொள்ளப்பட்ட நேயமற்ற ஒடுக்குமுறைக்கான நீதியையையும் பெற்றுக்கொள்ளுகின்ற ஒரு பொங்கல் காலம் வரும் என நம்புவோம். ஈழத் தமிழ் மக்களை சுற்றி பல்வேறு சூழ்ச்சிகளை பின்னுகின்ற இன்றைய கால கட்டத்தில், உலகத் தமிழர்கள் அனைவரும் விழிப்போடு இருக்க வேண்டும். பண்டிகைகள் அடிப்படையில் புதிய உணர்வையும் விழிப்பையும் தருபவை. வரும் காலம் ஈழத் தமிழர்களின் வாழ்வில் நல்ல முன்னேற்றங்களை தர வேண்டும்.

# தமிழரசுத் தலைவரின் ஒற்றுமைப் பயணம் :

## சவால்களும் சாத்தியங்களும்




செல்வழகன்

தமிரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் பிள்ளையாரின் திருமணம் போல நீண்ட நாள்களாக தள்ளி வந்து ஒருவாறு நடைபெற்று முடிந்துள்ளது. தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் ஏகமனதாக தலைவரைத் தெரிவு செய்யும் நிலை மாறி, மூன்று போட்டியாளர்கள் களத்தில் இறங்கியிருந்தனர். எதிர்பார்த்தது போலவே கிழக்கு மாகாண வேட்பாளர் சீ.யோகேஸ்வரன் சிறிதரனுக்கு ஆதரவைத் தெரிவித்து விலகிக் கொண்டார். போட்டியாளரான மதியாபரணம் ஏபிரகாம் சுமந்திரனைத் தோற்கடித்து புதிய தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறிதரன் தெரிவு செய்யப்பட்டார்.

தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சுடரேற்றி கார்த்திகைப்பூ வைத்து மாவீரர்களை வணங்கிய காட்சிகளை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. ஆயினும் அவர் இப்பத்தி எழுதப்படும் வரை தமிழரசுக் கட்சியை உருவாக்கிய தந்தை செல்வாவின் நினைவிடத்தில் வணங்கவில்லை. இதனை ஒரு குற்றச்சாட்டாகவே தமிரசுக் கட்சியின் கன்னை பிரிந்த அணிகளைச் சேர்ந்தோர் முகநூலில் வாதிடுகின்றனர். தமிழ்த் தேசியம் என்பது தந்தை செல்வாவின் காலத்திலேயே உருவாக்கப்பட்டு விட்டது என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

2009ற்கு முன்னையது போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு எத்தனை விட்டுக்கொடுப்புகளையும், தியாகங்களையும் செய்யத் தயாராக உள்ளதாக கனகபுரத்தில் சிறிதரன் பிரகடனப்படுத்தியுள்ளார். 2009ற்கு முன்னுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி இருந்தது. ஈபிஆர்எல்எப் இருந்தது. ரெலோ இருந்தது. பின்னர்தான் புளொட் இணைந்து கொண்டது.

வடக்கு மாகாண சபைக்கென கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட க.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக தமிழரசுக் கட்சியினூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்னிறுத்தப்பட்டு, வெற்றியீட்டி வடக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவரது ஆட்சியைப் பலவீனப்படுத்தும் வகையில், உள்ளிருந்து குழப்பங்களை ஏற்படுத்தியவர்கள் தமிழரசுக் கட்சியினரே. முதலமைச்சருக்கு குடைச்சலைக் கொடுத்தவர்கள் சுமந்திரனின் ஆதரவாளர்களான மாகாண சபை உறுப்பினர்களே. இவர்களுக்கு ஒத்தூதியவர் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

சுமந்திரனின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் விலகின என்ற குற்றச்சாட்டு உண்டு. அத்துடன் தமிரசுக் கட்சிக்குள் உள்வாங்கப்பட்ட ஐங்கரநேசன், அனந்தி சசிதரன், சிவகரன், அருந்தவபாலன் முதலிய பலரது வெளியேற்றத்துக்கும் சுமந்திரன் மீதே விரல் நீட்டப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எஞ்சிய கட்சிகளான ரெலோ, புளொட் என்பன தொடர்பில் சுமந்திரன் வெளியிட்ட கருத்துகளே கூட்டமைப்பை உடைத்து தமிழரசுக் கட்சியைத் தனிக் கட்சியாக்கியது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இவை குற்றச்சாட்டுகள் என்பதை விட பெருமளவில் உண்மையானதாகும்.

தனித் தனிக் கட்சிகளாகவும், உதிரிகளாகவும் உள்ளவர்களை இணைத்து கூட்டமைப்பாக கொண்டு வர வேண்டும் என்பது பலராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதுவே இந்தியாவின் நிலைப்பாடும். எனவேதான் கூட்டமைப்பாகத் திரள்வது தொடர்பில் சிறிதரன் தனது கருத்தை வெளியிட்டிருக்கிறார். இது பேச எளிய விடயமாயினும், செயற்படுத்துவதற்கு கடினமான பணியாகும். இதற்கு அதிகபட்ச விட்டுக் கொடுப்பும் சகிப்புத்தன்மையும் பற்றுறுதியும் மட்டுமல்ல உண்மையான ஈடுபாடும் அவசியமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஐந்து கட்சிகள் சேர்ந்து உருவான பின்னர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பொது வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்படுவதற்கு கட்சித் தலைவர் என்ற ரீதியில் மாவை சேனாதிராஜா முன்னின்ற போது தமிழரசுக் கட்சியினர் அவருக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு நின்றனர். அவ்வாறு நின்றவர்களில் சுமந்திரனும் சிறிதரனும் முக்கியமானவர்கள். அது மட்டுமன்றி, கடந்த தேர்தல்களில் தனது சொந்தக் கட்சி வேட்பாளர்களையே தோற்கடிக்கும் தந்திரோபாயங்களை மேற்கொண்டவர் சிறிதரன் என்ற குற்றச்சாட்டும் உண்டு. தேர்தல் காலங்களில் ஏனைய கட்சிகளான முன்னாள் இயக்கங்கள் மீது கறாரான விமர்சனங்களையும் சிறிதரன் முன்வைத்திருக்கிறார்.

அதற்கப்பால் அவர் முன்வைக்க விழைகின்ற ‘தமிழ்த் தேசியக் கருத்தியல்’ என்பது அவரது வார்த்தையில் கூறுவதானால் ஒட்டுக் குழுக்களுடன் இணங்கிப் போவதை ஆதரிக்கும் நிலைப்பாடல்ல. எனவே, அவர் இந்த இடத்தில் தெளிவான நிலைப்பாட்டையும், தெரிந்தெடுத்த வார்த்தைப் பிரயோகத்தையும் கொண்டிருக்க வேண்டும். அவர்களோடு இணங்கிச் செயற்படுவதானால் அவர்களது தியாகிகள் தினம் முதலான அனுஸ்டானங்களிலும் முழுமனதோடு பங்குபற்ற வேண்டும். ஏனெனில் ஈபிஆர்எல்எப் தலைவர் பத்மநாபா, ரெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினம், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம், புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் ஆகியோர் புலிகளாலேயே கொல்லப்பட்டனர் என்பதும், புலிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும், கூட்டணி தவிர்ந்த மேற்குறிப்பிடப்பட்ட இயக்கங்களால் கொல்லப்பட்டமையுமான கறுப்பு வரலாறு உண்டு. இந்தக் கறைகளுக்கிடையே ஒரு இணக்கப்பாட்டுடனேயே அல்லது தமது கட்டளையை ஏற்றுச் செயற்படக் கூடிய வகையிலேயே அப்போது விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் திரள்வதில் உள்ள இன்னொரு நெருக்கடி கூட்டமைப்பின் தலைமை, செயலாளர், தேசிய அமைப்பாளர், பேச்சாளர் பதவிகள் பகிர்ந்து வழங்கப்படுவதும், கூட்டமைப்பைப் பதிவு செய்வதும். இது எந்தளவுக்கு சாத்தியமாகும், இதற்கு தமிழரசுக் கட்சிக்குள் எந்தவாறான ஆதரவு கிடைக்கும் என்பதும் முக்கியமானது. தமிழரசின் முதன்மைப்படுத்தல் என்ற விடயங்களே கூட்டமைப்பு உடைவதிலும், தமிழரசில் இணைந்து கொண்ட ஏனைய உறுப்பினர்கள் பிரிந்து புதிய கட்சிகளை உருவாக்கவும் காரணமாயிருந்தது. அவ்வகையில் தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், வாழ்வுரிமைக் கட்சி என புதிய கட்சிகளே உருவாகியமை தமிழரசுக்குள் இருந்து பிரிந்து சென்றவர்களாலேயே ஏற்பட்டது. இதற்குள் ரெலோவின் தலைமைக்கு எதிராகச் சென்ற தமிழ்த் தேசியக் கட்சியையும் சேர்க்கலாம். எனவே, இந்தக் கூட்டமைப்பை மீளக் கட்டியெழுப்புவதில் உள்ளும் புறமும் சிறிதரன் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

மறுபுறம் தாமே மாற்றுக் குறையாத தூய தமிழ்த் தேசியவாதிகள் என்று மார்தட்டுகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக வெளிக்காட்டும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை கூட்டுக்குள் கொண்டு வருவது சாத்தியமேயல்ல. இந்தியாவையே பூரணமாக நம்பும் வகையில் சிறிதரன் கருத்துரைத்து வருகிறார். 13ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமைக்குள்ளான தீர்வையே இந்தியா பரிந்துரைத்து வருகிறது. அதைக் கூட இலங்கையிடம் அழுத்தமாகத் தெரிவித்து நடைமுறைப்படுத்த இந்தியா முயலவில்லை. கஜன்கள் அணியினரோ இதனைப் புறங்கையால் தட்டிவிடுபவர்களாகவே உள்ளனர். இந்தியாவுடனும், இலங்கை அரசாங்கத்துடனும் சேரந்து ஏனைய கட்சிகள் தமிழ் மக்களுக்குத் துரோகமிழைக்கின்றன எனக் கூவுகின்ற இவர்களை சிறிதரன் எப்படி இணைத்துச் செயற்படுவார் என்பது புரியவில்லை.

ஆகவே, சிறிதரனின் ஒற்றுமைப் பயணத்தில் பெருஞ் சவால்கள் உள்ளும் புறமும் உள்ளன. அடிபட்ட சுமந்திரனும், அவருக்கு வாக்களித்த 137 பொதுச் சபை உறுப்பினர்களும், மத்திய குழு, அரசியல் குழுவில் உள்ள அவருக்குச் சார்பான குழுக்களும் சிறிதரனுக்கு உள்ளிருந்து குடைச்சல் கொடுக்கும் நிலைமையை எதிர்காலத்தில் கண்டு கொள்ளலாம். ஆனால், தமிழரசுக்குள் இருந்து பிரிந்து சென்று போக்கிடமற்று நிற்கும் சிலரையாவது கட்சிக்குள் உள்ளெடுக்க சிறிதரனுக்கு வாய்ப்பு உள்ளது.

எப்படியோ, ஒற்றுமைப் பயணம் என அவர் எடுத்திருக்கும் நிலைப்பாடே பெரும்பாலான நிலத்திலும், புலத்திலும் உள்ள தமிழ் மக்களினதும், இந்தியாவினதும், அரசியல் நோக்கர்களதும் நிலைப்பாடும். இது சாத்தியப்படுமானால் தமிழ் மக்கள் ஒருபடி முன்னேறவும், திரளாக ஒரேகுரலில் பேசி சில தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்புண்டு.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 43 ஜனவரி 2024 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# 'வரி' சுமக்கும் மக்கள்

சிறிலங்காவில் பெறுமதி சேர்வரி எனப்படும் வற்வரி மூன்று சதவீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூல மாக 15சதவீதத்திலிருந்து வற்வரியானது 18சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவரின் அழிப்பான் முதல் தற்போது அனைத்துக்கும் வற்வரி அறவீடு செய்யப்படும் நிலை மைகள் காணப்படுவதோடு பொருட்கள், சேவைகளின் பெறுமதிகளும் தாராளமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2 சதவீதமாக இருக்கும் வருவாயை 12சதவீதமாக அதி கரிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் இலக்கு வைத்துள்ள நிலையில் தான் வற்வரி உள்ளிட்டவை அதிகரிக்கப் பட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் வருமானம் ஈட்டுவதற்கு அனைத்து கதவுகளும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் வரிகள் ஊடாக வருமானங்களை தேடிக்கொள்வதையே பிரதான இலக்காக கொண்டுள்ளது.

இதற்கு 2023ஆம் ஆண்டில் 187 பில்லியன் ரூபா நலன்புரிச் செலவு, 2024ஆம் ஆண்டில் 207 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மொத்த அரசாங்க வருமா னத்தில் 70 சதவீதம் கடன் வட்டியாக செலுத்தப்படவுள்ள தென்றும் தற்போது காரணம் கூற முயல்கின்றது.

இதனைவிடவும், ஒவ்வொரு சிறிலங்கா பிரஜையிட மிருந்தும் வரியை ஈய்ப்பச்செய்வதற்காக வருமான வரி இலக்கம் 18வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கு அத்தியாவ சியமானது என்று அறிவித்துள்ளதோடு வரி இலக்கமற்ற ஒரு பிரஜைக்கு ஐம்பதாயிரம் தண்டப்பணம் அறவீடு செய்யப்படுமென்ற கடுமையான உத்தரவும் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அத்தோடு, சாதாரண மோட்டார் சைக்கிள் முதல் அனைத்து வாகன உரித்துக்களை பதிவுசெய்யவும், கட்ட நிர்மாணங்கள் உள்ளிட்டவற்றுக்கான அனுமதிகளைப் பெறவும் வரி இலக்கம் அவசியம் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம், உள்நாட்டில் நடை பெற்ற கோடிக்கணக்கான சிறிலங்கா மத்திய வங்கி பிணை முறிகள் மோசடிகள் தொடர்பாகவோ, ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட, பாரிய ஊழல் மோசடிகள், வெளிநாடுகளில் இரகசிய முதலீ டுகள் போன்றவை தொடர்பாகவே எந்தவிதமான கரிசை களையும் கொள்ளவில்லை.

இவற்றைவிடவும், நாடு தற்போதைய வங்குரோத்து நிலைமையை அடைவதற்கு ராஜபக்ஷக்களும் அவர்க ளது சகாக்களும் காரணம் என்று உயர் நீதிமன்றத்தீர்ப்பு மிகத்தெளிவாக கூறப்பட்டுள்ளபோதும் அது சம்பந்தமாக எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவில்லை.

ஆனால், இத்தகைய மோசடியாளர்களை அதிகாரத்தில் அமர்த்துவதற்காக வாக்களித்த மக்களே தற்போது சுமை தாங்கிகளாக மாற்றப்பட்டுள்ளனர். வாக்களித்த பாவத்திற் காக வரிகளைச் செலுத்த வேண்டியவர்களாகியுள்ளனர்.

மேலும், அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள வரி ஈய்ப்பு இலக்கானது, வறியவர்களை தொடர்ந்தும் மீள முடியாத வறுமைக்குள்ளும், மத்திய வகுப்பினரை வறுமைக்குள்ளும் தள்ளிவிடும் அபாய நிலைமையையே ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், மேல்தட்டு வர்க்கத்தினருக்கு மேலும் சக்தியளிக்கும் வகையில் தான் வரி அமுலாக்கம் காணப்படுகின்றது. ஆகவே அரசாங்கம் உடனடியாக வரிக்கொள்கை மீளாய்வு செய்யாது விட்டால் எதிர்பார்த்த பொருளாதார இலக்கை அடைவதென்பது காணல் நீராகும்.

# உயிருக்கு ஆபத்தான நிலையில் சாந்தன் காப்பாற்ற கோரும் தாயார்

திருச்சி அகதிகள் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்படவேண்டும்; என்று சிறைக் கைதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு தமிழ் நாடு முதலமைச்சருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் சாந்தன் கல்லீரல் மற்றும் சிறுநீரக பாதிப்புக்குள்ளாகியுள்ளார். அவருக்கு திருச்சி சிறப்பு முகாமில் சாந்தனிற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை இதனால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது இதனால் சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவம னையில் அவருக்கு சிகிச்சை வழங்கவேண்டும் என சிறைக்கைதிகள் உரிமை மையம் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளதுடன் உயி ருக்கு போராடும் அவரை காப்பாற்றுமாறு வலி யுறுத்தியுள்ளது.

இதேவேளை சிறிலங்காவிலுள்ள சாந்தனின் தாயார் 78 வயதான மகேஸ்வரி அம்மா தனது மகனிற்கு ஏற்பட்டுள்ள உயிர் ஆபத்துக்குறித்து தனது கவலையை வெளியிட்டுள்ளதுடன் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் தனது மகனின் உயிரை காப்பாற்றுமாறு கோரியதுடன் அவரை சிறிலங் காவிற்கு அழைத்துவர ஏற்பாடுகளை செய்து தருமாறும் உருக்கமாக கோரியுள்ளார்.

சாந்தன் என்று அறியப்பட்ட சுதேந்திர ராஜா சிறிலங்காவை சேர்ந்தவர். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப் பட்டார். இந்த வழக்கில் அவர் உட்பட 7 பேருக்கு இந்திய நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. சுமார் 30 வருட சிறைத்தண் டனையின் பின்னர் தமிழ் நாடு அரசின் பொது மன்னிப்பில் கடந்த 2022 நவம்பரில் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் அவர் சிறிலங்கா வருவதற்காக கடவுச்சீட்டு மற்றும் பயண சிக்கல்கள் காரணமாக தற்போது வரையில் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

## மனமே நீ மாறிவிடு

*மனித மனம் கழுகுகள்*
*கொத்தித்தின்னும்*
*இறைச்சித்துண்டுகளாயின.*
*மானிடமே..!*
*மரணித்துப்போன இவ்வுலகில்,*
*மற்றவரை ஏன் குறை கூறுகின்றாய்.*
*எத்தனை பொய்.?*
*எத்தனை பித்தலாட்டம்.?*
*இன்னுமா உனக்கு புரியவில்லை.*
*வாழ்க்கையை நீ கற்றுக்கொள்ள*
*வானளவு உயரவேண்டும்.*
*வீண் விவாதம் செய்யாதே...?*
*வீழ்ந்து போய்விடுவாய் இவ்வுலகில்.*
*காக்கைக்கும்,*
*கழுகுக்கும் இரையாகி போகாமல்..!*
*உயர்வாக பழகிக்கொள்.*
*நீ பெரிது என்று இருந்தால்..!*
*நீண்டகாலம் இவ்வுலகில்,*
*நிலைப்பது நிரந்தரம் இல்லை. அதோ...!!*
*தெரிகிறது வானிலே கழுகுக்கூட்டம்.*
*மானிட வர்க்கத்தின் சுவையை,*
*சுகமாய் அறிந்த, பொல்லாத ஜீவன்கள்.*
*இத்தனையும் அறிந்த நீயா.......?*
*மனிதரை மதிக்காமல்..!*
*மிதிக்கின்றாய் காலிலே...!!*
*உறவுகளை உணராமல்*
*உதைக்கின்றாய் தூரத்திலே.*
*மாறிவிடு மானிடா,*
*உலகத்தின் வரலாற்றில்*
*நீ எழுதிய சரித்திரமாக....*

**மருதமண் பா மாலினி**

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து





# கோத்தபாய பொறுப்புகூற வைக்கப்படுவாரா?

## 1989 முதல் 2009 வரையில் மனித குலத்திற்கு எதிரான கோத்தபாயாவின் போர்க்கால வகிபாகம்

### ITJP வெளியிட்டுள்ள அதிர்ச்சி தரும் அறிக்கை




கோத்தபாயா ராஜபக்ஷ எப்போதாவது பொறுப்புக்கூற வைக்கப்படுவாரா என கேள்வி எழுப்பியுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்ட அமைப்பு (ITJP) கோத்தபாய ராஜபக்ஷவின் போர்க்கால வகிபாகம் என்னும் அதிர்ச்சி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவில் 1980களில் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற முன்னைய வன்முறைக்காலப்குதியின்போது, பாரிய வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களில் கோத்தபாய ராஜபக்ஷ ஈடுபட்டிருந்ததான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வுசெய்து 2022 இல் ITJP யால் வெளியிடப்பட்ட அறிக்கையின் தொடர்ச்சியாக இவ்வறிக்கை வெளிவருகின்றது

சிறிலங்காவில் போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு, முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, குறித்த உள்நாட்டுப் போரில் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் முக்கிய வகிபாகம் கொண்டிருந்ததற்கான பெருமளவு ஆதாரங்கள் வெளிவந்துள்ளன என மனித உரிமை வழக்கறிஞர்கள் புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நூறு பக்கங்களை கொண்ட இந்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய பாதுகாப்பு அமைச்சின் செயலராகப் பதவிவகித்தபோது, 2009 இல் சண்டைக்களத்திலிருந்த தளபதிகளுக்கு கட்டளைகளை வழங்கியமைக்கான விரிவான ஆதாரங்கள் மற்றும் அவர் இராணுவத் தளபதியாக இல்லாதபோதிலும்கூட, பாதுகாப்புப் படைகளுக்கு கட்டளையிட்டதுடன், அவர்கள் மீதான செயற்திறன் மிக்க கட்டுப்பாட்டினையும் கொண்டிருந்தமை, சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் சர்வதேச குற்றவியல் சட்டமும் மீறப்பட்டுக்கொண்டிருந்தமை தொடர்பாக அப்போதே நன்கு தெரிந்திருந்ததுடன், அவற்றைத் தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கத் தவறியதுடன், அல்லது, தனக்குக் கீழே செயற்பட்டவர்களைப் பொறுப்புக்கூறவைக்க முயலவுமில்லை என்பதை சான்றுகளுடன் வெளிச்சம்போட்டு காட்டப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது பொதுமக்களைப் பாதுகாப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட போர்த்தடை வலயங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் கோத்தபாய ராஜபக்ஷ கொண்டிருந்த வகிபாகத்தினையும், விசாரணைகளற்ற படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்கள், சித்திரவதை, பாலியல் வன்முறை, பாலியல் வன்புணர்ச்சி, எழுந்தமானகத் தடுத்தவைத்தல், பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் தடுத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு அவர் தவறியமையும் தொடர்பான ஆதாரங்களையும் இவ்வறிக்கை ஆய்வுசெய்கின்றது.

கோத்தபாயாவுக்கும் அவரது போர்க்கால தளபதிகளுக்கும் இருந்த படையணி மற்றும் பாடசாலைத் தொடர்புகள் 2009 வன்னி நடவடிக்கையின் போது இருந்த சிறிலங்கா இராணுவ கட்டமைப்பு இறுதிப் போரில் நடந்த குறிப்பிட்ட நிகழ்வுகள் வெள்ளைக்கொடியுடன் சரணடைதல், 3 போர்த்தடை மண்டலங்களை ஒருதலைப்பட்சமாக அறிவித்து அதற்குள் பொதுமக்களை செல்லுமாறு கூறி பின்னர் அவற்றின் மீது கனரக ஆயுதங்களால் கொடூர மனங்கொண்டு தாக்கியமை, தரைவழி இராணுவச் செயல்பாடு பற்றிய கோத்தபாயாவின் அறிதல், மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களில் ஒவ்வொரு வருடமும் வெளிவந்த முரண்பாடான தொகைகள் என்பன குறித்து மிகத் தெளிவாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் கோத்தபாய தொடர்பிலான அதிர்ச்சி தரும் மேலும் பல தகவல்கள் கொண்ட இந்த அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ITJP யின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா

'தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிராக வன்முறைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மிகவும் மோசமானவராக கோத்தபாய ராஜபக்சவே இருக்கமுடியும். 1989 தொடக்கம் 2009 வரைக்கும்,

அத்துடன் இன்றுவரைக்கும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் போக்கு காணப்படுகின்றது.

பல விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் அறிக்கைகள் வெளியிடப்படாமலும் பரிந்துரைகள் நிறைவேற்றப்படாமலும் உள்ளன.

இவை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஏமாற்றத்தினையும் அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையையும் ஏற்படுத்தின.

குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறவைக்காமல், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குத் தேவைப்படும் மீளவும் நிகழமாட்டா என்பதற்கான உத்தரவாதத்தினை வெறுமனே ஆணைக்குழுக்களின் விசாரணைளால் பெற்றுவிட முடியது என்பது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என ஊடக அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.

**தேசிகன்**

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் 23,24ஆகிய இரு தினங்களில் கடுமையான சர்ச்சைகளுக்கு மத்திய முன்னெடுக்கப்பட்ட உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்ட மூலத்தின் மீதான விவாதம் நிறைவுக்கு வந்து தற்போது அது நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்டளைக்கும் அரசியலமைப்புக்கும் முரணாகும். உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தில் உயர் நீதிமன்றத்தின் திருத்தங்கள் தொடர்பில் துறைசார் மேற்பார்வைக்குழுவில் ஒவ்வொன்றாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்காமல் அது தொடர்பில் விவாதிக்க முடியாது.

ஆனால் அரசாங்கம் அவசர அவசரமாக துறைசார் மேற்பார்வைக்குழுவின் அனுமதியைப் பெற்று, முழுமையாடையாத வகையில் வெறுமனே இரண்டு பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றை உறுப்பினர்களுக்கு அளித்துவிட்டு அவர்களுக்கு அதனைப் படித்துப் பார்ப்பதற்கு கூட கால அவகாசத்தினை வழங்காது விவாதத்தினை ஆரம்பித்திருந்தது.

# சிறிலங்கா அரசாங்கத்தின் அடக்குமுறையின் மறுவடிவம்



முன்னதாக, குறித்த சட்டமூலத்தினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சிவில் அமைப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் போர்க்கொடி தூக்கியிருந்த நிலையில் 23ஆம் திகதி காலையில் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடிக்கதைத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேரில் சந்தித்து குறித்த சட்டமூலத்தினை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்தினார்கள்.

எனினும் ஏற்கனவே ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அங்கீகரித்துள்ளதாக அக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் லலித் வரண்குமார உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்ட மூலத்துக்கு அனுமதி வழங்கிய நிலையில் அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதில் தடைகள் இல்லை என்று சபாநாயகர் தரப்பில் கூறப்பட்டது.

எனினும், பின்னர் கட்சித்தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டு, உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்ட மூலம் சம்பந்தமாக உரையாடியபோது அடுத்தகட்டமாக குறித்த சட்டமூலத்தினை விவாதத்துக்கு எடுப்பதா இல்லையா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அந்த வாக்கெடுப்பில், சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென 83 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதன் பிரகாரம் 33 மேலதிக வாக்குகளால் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்ட மூலம் மீதான விவாதம் இடம்பெறும் சபாநாயகர் அறிவித்தார்.

இதனையடுத்து, உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்ட மூலம் தொடர்பாக பல்வேறு தர்க்கங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக ஆளும் எதிர்த் தரப்பினரால் சட்டமூலத்தினை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் தீமைகள் தொடர்பில் தர்க்கங்கள் முன்வைக்கப்பட்டன.

இதேநேரம், குறித்த சட்டமூலத்தினை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டமையும், அதற்காக பின்பற்ற முறைமையும் சம்பிரதாயங்களுக்கு முரணானது என்ற வாதங்களும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

அரசிலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டமூலம் ஒன்று தொடர்பில் சபையில் விவாதிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான எந்த அறிக்கையும் நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் தொடர்பில் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

அவ்வாறான நிலையில் குறித்த சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கும் அரசியலமைப்புக்கும் முரணாகும்.

**‘நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்’**

இதேவேளை, உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் தொடர்பில் 57 திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று சட்ட வல்லுநர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான திருத்தங்கள் இருக்கின்ற நிலையில் அவற்றில் 34 திருத்தங்களை உயர் நீதிமன்றம் முன்வைத்திருக்கின்றது என்பதும் முக்கியமான விடயங்கள்.

இவ்வாறான நிலையில், குறித்த உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்ட மூலத்தில் அவ்விதமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதா இல்லையா என்பதை அறிவதற்கு துறைசார் அறிக்கை எவ்விதமான பிரசமான தெளிவுபடுத்தல்களையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறனதொரு நிலையில் தான் குறித்த சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஈற்றில் குழு நிலையில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடியால் சட்டமூலத்தின் 36ஆவது பிரிவு தொடர்பில் முன்வைக்கப்பட்ட திருத்தத்துக்கு வாக்கெடுப்புக் கோரப்பட்டது.

இதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் குறித்த திருத்தத்துக்கு ஆதரவாக 51 வாக்குகளும், எதிராக 92 வாக்குகளும் அளிக்கப்பட்டு 41 மேலதிக வாக்குகளால் இந்தத் திருத்தம் தோற்கடிக்கப்பட்டது.

அதன்பின்னர் உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் மீது எதிர்க்கட்சியின் பிரதமகொரடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்லவால் வாக்கெடுப்புக் கோரப்பட்டது.

இதற்கு அமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்கும் எதிராக 62 வாக்குகளும் பதிவாகின. இதற்கமை இந்தச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டாலும் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட முறைமை தொடர்பில் பல்வேறுவிதமான சுட்டிக்காட்டல்கள் உள்ளன. விசேடமாக அரசியலமைப்பின் 76ஆவது பிரிவுக்கு அமைவாக அது நிறைவேற்றப்பட வேண்டிய முறைமைகளை பின்பற்றவில்லை என்பதால் குறித்த சட்டமூலத்தினை சட்டமாக கருதமுடியாது என்ற தர்க்கங்களும் தாராளமாக உள்ளன.

உண்மையில் இந்தச் சட்டமூலத்தினை அரசாங்கம், பெண்கள், சிறுவர்கள் மற்றும் தனிநபரின் கௌரவம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காகவே கொண்டுவருவதாக அறிவித்திருந்தது.

ஆனால் சிறிலங்காவைப் பொறுத்தவரையில் அவ்விதமான நிலைமைகளை கட்டுப்பதற்கு போதுமான வரையிலான சட்டங்கள் உள்ளன. குறிப்பாக கணிணிப் பாதுகாப்புச் சட்டம், பெண்கள், சிறுவர்கள் பாதுகாப்புச் சட்டம், இணைய ஒழுங்குபடுத்தல்கள் சார்ந்த ஏற்பாடுகள் என்று அவை காணப்படுகின்றன.

இவற்றுக்கெல்லாம் அதிகமாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்ற போது அதுசார்ந்த சட்டங்களும் காணப்படுகின்றன.

ஆகவே தற்போதிருக்கின்ற நிலைமையில் அவ்விதமான சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றபோது நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு இயலுமானதாக இருக்கும்.

ஆனால், உள்நாட்டில் அவ்விதமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அனைத்து அரச தரப்புக்களும் தோல்வி கண்டவையாகவே உள்ளன. எனவே, தொடர்ச்சியாக சட்ட அமுலாக்கத்தில் காணப்படுகின்ற தோல்விகளை அரசாங்கம் உணர்ந்துகொண்டு புதிய ஏற்பாடுகளுக்குச் செல்வது பொருத்தமானதாகும்.

இதனைவிடவும், நிகழ்நிலை காப்புச் சட்டம் அமுலாகின்றபோது, நிறைவேற்று அதிகாரத்தின் அதிகார எல்லையானது மேலும் விரிவடைவதற்கான நிலைமைகளே உள்ளன.

உதாரணமாக கூறுவதாயின். குறித்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் ஆணைக்குழு ஒன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணைக்குழுவிற்கு ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களே அனைத்து விசாரணைகளையும் முன்னெடுக்கவுள்ளனர்.

அந்த குழுவின் உறுப்பினர்களை நியமிக்கின்ற அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடத்தில் தான் உள்ளது. அதேநேரம் குறித்த ஆணைக்குழுவின் தவிசாளரைக் கூட ஜனாதிபதியே நியமிப்பவராக காணப்படுகின்றார்.

ஆகவே குறித்த ஆணைக்குழுவானது நிச்சயமாக ஜனாதிபதியின் கைப்பொம்மையாகவே இருக்கப்போகின்றது. மாறாக அது சுயாதீனமாக இருக்கப் போவதில்லை என்பது வெளிப்படையானது. ஏலவே சிறிலங்கா அரசாங்கத்தின் அரசியலமைப்பு சபை ஊடாக நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட ஆணைக்குழுவே எவ்வளவு மோசமானதாக இருக்கின்றது என்பது வரலாறு.

அவ்வாறான நிலையில், ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவின் சுயாதீனம் பற்றி கிஞ்சித்தும் சிந்தித்துப்பார்க்கத் தேவையில்லை.

மேலும், நிகழ்நிலை காப்பு சட்டத்தில் எவ்விதமான விடயங்கள் குற்றங்களாக அடையாளப்படுத்தப்படும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதடினப்படையில் அதுவொரு நீண்ட பட்டியலாக இருக்கையில் பிரஜைகளின் கருத்து வெளியிடும் சுத்திரமானது நேரடியாகவே கட்டுப்படுத்தப்படுவதாக உள்ளது.

மேலும் விசாரணைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் ஆணைக்குழுவானது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு பரிந்துரைக்கின்றது. அதன் பின்னரேயே தீர்ப்பு கிடைக்கப்போகின்றது. ஆகவே அந்தச் செயற்பாடுகள் பிரஜைகளினை முழுமையாக செயற்படாது முடக்குவதாகவே உள்ளது.

இவ்வாறு அனைத்து வழிகளிலும் பிரஜைகளை கட்டுப்படுத்துகின்ற செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில், அரசாங்கம் அதிகரிக்கப்பட்டுள்ள வற்வரி உட்பட ஏதேச்சதிகார செயற்பாடுகளுக்கு எதிராக பொதுமக்கள் வீதிக்கு இறங்கக் கூடாது என்பதை மையப்படுத்தியே இவ்விதமான சட்டத்தை அமுலாக்கின்றது.

குறிப்பாக, கடந்த அரகலய போராட்டத்துக்கு சமூக ஊடகங்கள் தான் பெருமளவில் கைகொடுத்ததாக அரசாங்கம் நம்புகின்ற நிலையில் அவற்றை கட்டுப்படுத்துவதன் ஊடாக ஒட்டுமொத்த பிரஜைகள் சமூகத்தையும் விமர்சனத்தையும் கட்டுப்படுத்த முடியும் என்று அரசாங்கம் நம்புகின்றது. அதன் வெளிப்பாடே அவசரஅவசரமாக இந்தச் சட்டமூலத்தினை அறிமுகப்படுத்துவதன் நோக்கமாகும்.




## இலண்டனில் கொண்டாடப்பட்ட

# தமிழ் மரபுத் திங்கள் விழா

**டிலக்ஷன் மனோரஜன்**

தமிழர்கள் வாழ்வின் பெரும் பண்பாட்டு நிகழ்வான தமிழ் மரபுத் திங்கள் விழா இலண்டனில் நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இயற்கையை தெய்வமாக வழிபடும் தமிழர்கள் அந்த இயற்கைக்கு நன்றி கூறி விழா எடுப்பதுடன் தமிழர்களின் பண்பாட்டு சிறப்பையும்; கொண்டாடும் இந்த தை மாதத்தில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் தைத் திருநாளை கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் பிரித்தானியாவின் பல பகுதிகளிலும் பரந்து வாழும் தமிழர்கள் தம் அடையாளங்களின் வழி பயணிக்கவும் தம் அடையாளங்களை இளைய இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதற்கும் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகளை பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் (TIC) மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் (CCD) ஆகியன இணைந்து தமிழ் மரபுத் திங்கள் விழாவினை நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) கோலாகலமாக கொண்டாடினர்.

தமிழர்களின் வீர இசை பறை முழங்க மங்கள வாத்திய இசை மற்றும் மயிலாட்டம், குதிரையாட்டம், புலியாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம் என தமிழர் கண்கவர் கலைகளுடன் விருந்தினர்கள் திறந்தவெளி அரங்கிற்கு அழைத்துவரப்பட்டு பல்வேறு கலை நிகழ்வுகளுடன் கோலாகலமாக நடைபெற்றது.

நமது ஈழநாட்டின் பிரதான ஊடக அனுசரணையுடன் கிங்ஸ்டனின் நியூ மோல்டனில் உள்ள Jubilee Square எனும் இடத்தில் வெகுசிறப்பாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக,

தாராளாவாத ஜனநாயகக்கட்சியின் (Liberal Democrat) தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சேர் எட் டேவி (Rt.Hon.Sir Ed Davey), ரிச்மண்ட் பார்க் மற்றும் கிங்ஸ்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சாரா ஒல்னி (Hon. Sarah Olney) ஆகியோரும் கிங்ஸ்டன் நகரபிதா கவுன்சிலர் Cllr. Diane White (Mayor of Royal Borough of Upon Themes), துணை மேயர் ரிச்சர்ட் தோர்ப் (Cllr. Richard Thorpe) மற்றும் அவரது துணையியார் Cllr. Lynn Henderson, கிங்ஸ்டன் நகரசபை தலைவர் கவுன்சிலர் அன்றியஸ் கேர்ஸ்ச் (Cllr. Andreas Kirsch), கிங்ஸ்டன் கவுன்சில் நிறைவேற்று பணிப்பாளர் சாரா அயர்லாந்து (Sarah Ireland CEO) ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிறப்புரைகளும் வழங்கினர்.

மேலும் முன்னாள் மேயரும் தற்போதய கவுன்சிலருமான தயா தயாளன் மற்றும் பல கவுன்சிலர்கள், தமிழ் அமைப்புக்களின் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தனர்.

திறந்தவெளி அரங்கில் இடம் பெற்ற இந்நிகழ்வானது தமிழர்களின் பண்பாட்டு பெரும் அடையாளமான பொங்கல் காட்சிப்படுத்துலுடனும் சறே தமிழ் பாடசாலை மாணவர்களின் தமிழ் மொழி வாழ்த்து மற்றும் கிங்ஸ்டன் தமிழ் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் ஆகியவற்றுடன் சிறப்புற ஆரம்பமானது.

தொடர்ந்து அதிதிகளின் சிறப்புரைகளும் மாணவ மாணவிகளின் நடனங்கள் மற்றும் மயிலாட்டம் கும்மியாட்டம் கோலாட்டம் என்பனவும் அரங்கேற்றப்பட்டது. அத்துடன் தமிழர்களின் கலைகளில் ஒன்றான வர்மக் கலை நிகழ்த்தி காண்பிக்கப்பட்டதுடன் மெய்வெளி அரங்க இயக்கத்தின் சர்வதேசமே கேள் கூத்தல் ஒரு கட்டியம் என்ற நாட்டுக்கூத்தும் அரங்கேற்றப்பட்டது.

இதனிடையே இந்த மரபுத் திங்கள் விழாவின் போது “இலங்கைத் தமிழர்கள்: ஒரு காலவரையறையற்ற பாரம்பரியம்” (Tamils of Lanka : A Timeless Heritage) என்ற கண்காட்சியும் இடம்பெற்றது. தமிழரின் வரலாற்றை அவர்களின் பயணப் பாதையை மிக இலகுவாக வெளிக்காட்டி நின்ற அந்த கண்காட்சியில் தமிழர்களின் பண்டைய பாவனை பொருட்கள் மற்றும் அவர்கள் மீது அரங்கேற்றப்பட்ட தொடர்ச்சியான இனவழிப்பு சாட்சியங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டன.

மறுபக்கத்தில் சமையல் கலை நிபுணரான கௌரி ரூபன் அவர்களின் தமிழ் பாரம்பரிய உணவுக்கண்காட்சியும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு Newmalden Partnership, Royal Borough of Kingston Upon Themes தமிழ் பாடசாலை மற்றும் கிங்ஸ்டன் தமிழ் பாடசாலை ஆகியன இணை அனுசரணை வழங்கியதுடன் IBC தமிழ் மற்றும் மெய்வெளி ஆகியன ஊடக அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்லின பண்பாட்டுச் சூழலில் நாம் எமது மரபுகளை பேணிப் பாதுகாப்பதற்கும் நாம் ஒரு நீண்ட நெடிய நாகரீகமுடைய தமிழ் தேசிய இனம் என்பதை நிலை நிறுத்துவதற்கும் பல்வேறு நாகரிகங்களைக் கொண்ட மக்கள் வாழும் பிரித்தானியாவில் தமிழ் மரபுத்திங்கள் எங்கள் இனத்தின் பெரும் அடையாளமாக திகழ்கின்றது.

**படங்கள் : கஜானந் சுந்தரலிங்கம்**








# தமிழ் மரபுத் திங்கள் விழா












படங்கள் கஜானந் சுந்தரலிங்கம்








# வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தை அள்ளவே ரணில் விஜயம்

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கருத்து

வடக்கு கிழக்கின் பொருளாதார வளத்தை அள்ளி வெளிநாடுகளு்கு விற்கவே ஸ்ரீலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம், ரணலின் இரட்டை முகத்தை உலகத்திற்கு அம்பலப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. அண்மையில் வடக்கிற்கு அதிபர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட பயணம் குறித்து தமிழ் தேசிய ஆய்வு அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது குறித்து அமையம் மேலும் தெரிவித்ததாவது:






### நான்கு நாள் பயணம்

“ஸ்ரீலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்க தமிழர் தேசத்திற்கு கடந்த சனவரி 4ஆம் நாளன்று விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். 7ஆம் திகதிவரை அங்கே முகாமிட்டிருந்த ஸ்ரீலங்கா அதிபர் தமிழர் தாயகத்தில் வடக்கின் யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் தங்கியிருந்தார். அவரது வருகையை முன்னிட்டு ஸ்ரீலங்கா படைத்தரப்பும் காவல்துறையினரும் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர். உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணத்தின் பாடசாலை மைதானம் ஒன்றில் தரையிறங்கிய ஸ்ரீலங்கா அதிபர், ஆடம்பரமாக முறையில் தரைவழியாக சென்று பல்வேறு சந்திப்புக்களிலும் ஈடுபட்டுள்ளதுடன் பல கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா அதிபரின் பயணத்தின்போது, தமிழ் ஈழ மக்கள் பல்வேறு எதிர்ப்பு போராட்டங்களை நடாத்தியுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் இனப்படுகொலைப் போரில் கொல்லப்பட்டவர்களின் உறவுகளும் விடுதலை வேண்டியும் நீதி வேண்டியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை ஸ்ரீலங்கா காவல்துறையினர் போராட்டக்காரர்களை முடக்கும் வகையில் தடைகளை விதித்திருந்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்திருந்த நிகழ்வுகளும் அன்றைய நாட்களில் இடம்பெற்றுள்ளன.

### வருகைதர முதலே தடை

ஸ்ரீலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயத்தை முன்னிட்டு இரு தரப்பினர்மீது நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதிபருக்கு எதிராக போராடலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் உள்ளிட்ட தரப்பினர்மீதும் கிளிநொச்சியில் இயற்கை அழிப்புக்கு ரணில் ஆதரவு வழங்குதவற்கு எதிராக போராட்டத்தில் ஈடுடத் தீர்மானித்த மக்கள் தரப்புமீது காவல்துறையினர் நீதிமன்றம் ஊடாக தடையுத்தரவுகளைப் பெற்றிருந்தனர். இவ்வாறு ஸ்ரீலங்கா அதிபர் வருவதற்கு முன்னரே தடையுத்தரவு பெற்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்க்காமல், மக்கள் போராட்டத்திற்கு அஞ்சி ஓடுவதில் மகிந்த ராஜபக்சக்களை விஞ்சிய நிலையில் இன்றைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க உள்ளார். கடந்த காலத்தில் இவர் எதிர்கட்சித் தலைவராக இருந்த போது, அதிபர் கதிரையை இலக்கு வைத்து இருந்த காலத்தில் வடக்கிற்கு விஜயம் செய்த வேளை மக்களை சந்தித்து பல்வேறு வாக்குறுதிகளை கொடுத்திருந்தார். இப்போது ஸ்ரீலங்காவின் அதிபராகிவிட்ட நிலையில், தமிழ் மக்களின் விடுதலை மற்றும் நீதிக்கான குரலைக் கேட்ட அஞ்சி ஓடும் நிலையை இவர் ஏற்படுத்தியிருப்பது சிந்திக்கவும் வேண்டிய விடயமாகும்.

### அரசியல் தீர்வு என்ற புராணம் என்னாச்சு?

தென்னிலங்கையிலும் சர்வதேச ஊடகங்களிலும் அரசியல் தீர்வினை வழங்குவேன் என்று ஸ்ரீலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்திருந்தார். கடந்த கால அதிபர்களைப் போலன்றி தான் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்க முயற்சி எடுப்பேன் என்று சர்வதேச ஊடகம் ஒன்றில் கடந்த ஆண்டில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி கூறியிருந்தார். அத்துடன் ஸ்ரீலங்காவில் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட அரசியல் தீர்வை வழங்குவது அவசியம் என்றும் வகுப்பெடுத்திருந்த போதும் வடக்கு விஜயத்தின் போது அதிபர் ரணில் அரசியல் தீர்வு குறித்து வாய்திறக்காமை எதற்கான வெளிப்பாடு என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

2015ஆம் ஆண்டு முதல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஆட்சி புரிந்தார். இந்தக் காலத்திலும் தமிழர்களுக்கு தீர்வு முன்வைக்கப்படும் என்று ரணில் கூறியிருந்தார். ஆனால் தமிழ் தரப்பின் ஆதரவைப் பெற்று, இனப்படுகொலை செய்த இனப்படுகொலைக் குற்றவாளிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை சர்வதேச அரங்கில் இருந்து அதிபர் ரணில் அன்று பிரதமராக பிணை எடுத்தார். பின்னர், அதற்காகவே ராஜபக்சவினர் ரணிலுக்கு நன்றியுபகாரமாக அதிபர் பதவியை தற்போது வழங்கியுள்ளனர். ரணில் ராஜபக்சக்களின் முகமாகவே செயற்படும் நிலையில் அவர் எவ்வாறு அரசியல் தீர்வை முன்வைப்பார் என்பதே இங்கு உணர வேண்டியது.

### தமிழரின் பொருளாதாரததை சுறண்டும் நரி

வடக்கில் சிறந்த பொருளாதாரம் உள்ளது என்றும் அதனை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்றும் அதிபர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி கூறிவந்ததை ஊடகங்களில் கண்டோம். அண்மைய பயணத்தின் போதும் கூட வடக்கில் தமிழர்களின் பொருளாதாரத்தை சுறண்டி அந்நிய தேசத்திற்கு விற்பனை செய்யும் நிகழ்சியும் முன்னெடுக்கப்பட்டது. அதற்கு எதிராக போராடத் தயாராக இருந்த மக்களை காவல்துறையினர் வழியாக நீதிமன்றத் தடையுத்தரவுகளைப் பெறுவித்து, அடக்கி ஒடுக்கும் வேலைகளை செய்திருந்தார். இதுவே தமிழர் பொருளாதாரத்தை சுறண்டும் ரணிலின் நரித்தனத்திற்கு தக்க சான்றாகும்.

இதேவேளை உலகத் தமிழர் அமைப்புக்களை வீழ்த்தி அதனை வைத்துக் கொண்டு ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை நிமிரத்தவும் அதிபர் ரணில் நரித்தந்திர நகர்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

இதற்காக இமாலயப் பிரகடனம் என்ற நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் வாயிலாக அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்ற பேச்சுக்கள் முன்வைக்கப்படுவதன் வாயிலாக போலி விம்பம் ஒன்றை உருவாக்கி, காலத்தை இழுத்தடித்து முன்னர் தமிழ் தலைவர்களை ஏமாற்றியதைப் போல, இப்போது புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றை ஏமாற்றி நரி அரசியலை மேற்கொள்ள அதிபர் ரணில் திட்டமிட்டுள்ளார்.

எனவே தமிழர் தாயகத்தை பாதுகாக்கவும், தமிழினப் படுகொலைக்கான நீதியைப் பெறவும் சர்வதேச பொறிமுறை ஊடாக இனப்படுகொலைக்கான விசாரணை நடாத்தப்பட்டு, பொதுவாக்கெடுப்பு நடாத்தி, பன்னாட்டுச் சமூகத்தை தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் நிலையை நோக்கி நாம் நகரவும் செயற்படவும் வேண்டியதே இன்றைய காலத்தின் கட்டாயமாகும். ரணிலின் நரித்தந்திர நகர்வுகளை முறியடித்து விடுதலையை வென்றெடுக்கும் இனமாக விழிப்புடன் நாம் இருக்க வேண்டும்...” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மக்களை ‘நாடி’ பிடித்துப்பார்த்த ரணில்

**தந்திரீகன்**

புத்தாண்டு பிறந்த கையோடு முதல் விஜயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாட்கள் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த விஜயத்தின் முதலாம், இரண்டாம் நாளில் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி தேர்தல் தொகுதி மற்றும் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா அடங்கிய வன்னி தேர்தல் தொகுதி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களை நடத்தியிருந்தார்.

சட்டத்தால் இந்த அதிகாரங்கள் அனைத்தையும் வழங்கலாம். ஆனால் உங்களின் மாகாணத்தை அபிவிருத்தி செய்ய போதிய பணம் இல்லை என்றால் அதன் பெறுமதி என்ன என்று நாம் கண்டறிய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்கான நில ரீதியிலான தொ டர்பை ஏற்படுத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் கலந்துரையாடியதாக குறிப்பிட்ட அவர் பொருளாதார அபிவிருத்திக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என்றும் கூறியுள்ளார்.



அதற்கு அடுத்தபடியாக, இந்திய தனியார் தொலைக்காட்சி இசைப்போட்டி நிகழ்வில் கிரீடம் சூடிய கில்மிசா உதயசீலன், பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 22ஆவது ‘மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்சிப்’ போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்ற அகிலத் திருநாயகி ஆகியோரைச் சந்தித்து பாராட்டிக் கௌரவிப்பையும் செய்தார்.

இதனைவிடவும், சிவில் அமைப்பினர், மதத்தலைவர்கள், வர்த்தசங்கத்தினர், பல்கலைக்கழகத்தினர், வைத்தி யர்கள், கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், கட்சியின் ஆதரவாளர்கள் என்று பல்வேறு சந்திப்புக்களையும் நடத்தி அதில் வேறுபட்ட வாக்குறுதிகளையும் வழங்கியிருக்கின்றார்.

அதுமட்டுமன்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இவ்வருடத்தில் 3சதவீதம் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதோடு, 2025 ஆம் ஆண்டில் 5சதவீதமாக பலப்படுத்த எதிர்பார்க்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு இவ்வருடத்தில் 12சதவீதம் மொத்த தேசிய உற்பத்தியை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதோ் வருட இறுதியில் 15சதவீதமாக அதனை பலப்படுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், வட மாகாணத்தின் அபிவிருத்திக்குத் தேவையான அனைத்து வளங்களும் இங்கு உள்ளன. வடக்கு மாகாணத்தை தனித்துவமான பொருளாதார மையமாக கட்டியெழுப்ப முடியும். மேலும், வடக்கை புதுப்பிக்கத்தக்க வலு சக்தி மையமாக உருவாக்க முடியும். வடக்கின் அபிவிருத்திக்கு மட்டுமன்றி முழு நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிக்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன், மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது. எனவே, அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது

நாம் ஜப்பான் தொடர்பில் கவனம் செலுத்தினால், ஜப்பான் சமஷ்டி ஆட்சியுள்ள ஒரு நாடு அல்ல. ஆனால் அதன் அனைத்து மாகாணங்களும் அபிவிருத்தி அடைந்துள்ளன.

இதனைவிடவும், சிவ ஆலயங்களை மையப்படுத்தியும், இராமாயணத்தை மையப்படுத்தியும் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தல், பூநகரி, மன்னார் ஆகிய பகுதிகளில் உள்ள இயற்கை சக்தி வளத்தை பயன்படுத்தி மின்சாரத்தைப் பெற்று இந்தியாவுக்கு விற்பனை செய்தல் விரிவுரையாளர்கள் பரிமாற்றம், வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி, உள்ளிட்ட பல வருமான வழிகளையும் கோடிட்டுக் காண்பித்துள்ளார்.

தனது பயணத்தின் ஆரம்பம் முதலே புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளைச் செய்யுமாறு அழைப்பு விடுத்து வந்தவர் பயணத்தின் இறுதி நாளில் அரசியலமைப்புக்கு அமைவாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு நான் தயாராகவே உள்ளேன். ஆகவே மாகாணத் தலைமைகள் தலைமையை ஏற்பதற்கு தயாராக வேண்டும். அதன் பின்னர் மத்திய அரசாங்கத்தினை திட்டித்தீர்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை என்றும் கருத்தினைக் கூறியுள்ளார்.

மேற்படி கருத்துக்களை ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்துகின்றபோது மிகத் தெளிவாக இவை அனைத்தும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்திய வையே என்பது மிகத் தெளிவாக புரிகின்ற ஒருவிடயமாகும்.

அதிலும், விசேடமாக, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாய்திறக்காத அவர், இறுதி நாளில் மத்திரம் அரசியலமைப்பில் உள்ளவாறு அதிகாரங்களை பகிர்வேன் என்றே கூறியிருக்கின்றார்.

அந்தக் கூற்றானது, ஏறக்குறைய, காணி,பொலிஸ் அதிகாரங்கள் அற்ற ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்தலாகும் என்பது மிகத் தெளிவாகின்றது. அதுமட்டுமன்றி, சமஷ்டிக் கோரிக்கையால் பலனில்லை என்பதையும் அவர்வேறொரு விதமாக, கூறியிருக்கின்றார்.

குறிப்பாக, மாகாணங்களுக்கு அதிகாரங்கள் இன்றி ஜப்பான் போன்ற நாடுகளின் அனைத்து மாகாணங்களும் அபிவிருத்தி அடைந்துள்ளதாக வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் 13ஆவது திருத்தச்சட்டம் மாகாண அபிவிருத்தியை மையமாக வைத்தே கொண்டுவரப்பட்டது என்று புதிய அர்த்தம் கற்பிப்பதற்கும் அவர் விளைந்துள்ளார்.

அதுமட்டுமன்றி, வடமாகாணத்தினை மேம்படுத்துவதற்குள்ள தெரிவுகளை சரியாக அடையாளம் கண்டிருக்கின்றார் என்பதை வரவேற்றாலும் கூட அந்த வளங்களையும், வாய்ப்புக்களையும் வடமாகாணம் தன்னிறைவை அடைவதற்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பது சம்பந்தமாக எந்த கருத்துக்களையும் அவர் வெளிப்படுத்தவில்லை.

மாறாக, சக்தி வளங்கள், அறிவுசார் திறன்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஏற்றுமதி செய்வதன் ஊடாக தேசிய வருமானத்தினைப் பெருக்கிக் கொள்வதற்கே முனைகின்றார் என்பது மிகத் தெளிவாகப் புரிக்கின்ற விடயமாகின்றது.

இதனைவிடவும், இந்தியாவை ‘தயா’ செய்யும் வகையிலும், வடக்கின் அனைத்து விடயங்களிலும் இந்தியாவின் தயவையே தாம் முழுமையாக நம்பியிருப்பதாகவும், இந்தியாவின் கனவான தரைவழி இணைப்பை ஏற்படுத்தவதற்கு தயாராக இருப்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் ஊடாக, வடக்கில் அதிக கரிசனை கொண்டிருக்கும் இந்தியாவின் விருப்புக்கும், நலன்களுக்குத் தான் எதிரானவன் அல்ல என்பதை நிரூபனம் செய்வதே அவரது நோக்காக இருந்துள்ளது. அதுமட்டுமன்றி தேர்தலில் இந்தியா தன்னை எதிர்காகதிருக்கச் செய்வதும் மற்றொரு திட்டப் பின்னணியாக உள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்கையில், புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளைச் செய்வதற்கு வருகை தருமாறு தொடர்ச்சியான அழைப்புக்களை ரணில் விக்கிரமசிங்க அனைத்து சந்தர்ப்பங்களிலும் விடுத்திருக்கின்றார். அந்த அழைப்பு தொடர்பில் சில கேள்விகள் உள்ளன. குறிப்பாக, புலம்பெயர் தமிழர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடுகளைச் செய்வதாக இருந்தால் முதலில் அதற்கான ஏதுநிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, மாகாணங்களுக்கான நிதி மற்றும் நிருவாக அதிகாரங்கள் முழுமையாக கையளிக்கப்பட வேண்டியுள்ளது. அவ்வாறில்லாது விட்டால் புலம்பபெயர் தமிழர்கள் முதலீடுகளைச் செய்கின்றபோது அவற்றை கையாள்வதற்கான அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே காணப்படும்.

அடுத்து, வடமாகாணத்தின் மேம்பாட்டிற்கு அந்த முதலீடுகள் மூலம் கிடைக்கும் இலாபங்கள் பயன்படுத்தப்படும் என்பதற்கு எந்தவிதமான உறுதிப்பாடுகளும் இல்லை. ஏனென்றால் ரணிலைப் பொறுத்தவரையில் அவர் தேசிய பொருளாதாரத்தினை ஐந்து சதவீதமாக உயர்த்துவதையே நோக்காக கொண்டுள்ளார்.

அந்த வகையில், அவர் வடமாகாண முதலீடுகளை மாகாணத்தின் ஊடான தேசிய பொருளாதார பங்களிப்பு என்ற போர்வையில் வருமானத்தை மத்திக்கு கொண்டு செல்வதையே நோக்காகக் கொண்டிருக்கின்றார்.

அவ்விதமான ஒரு நிலையில் புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு வடக்கில் தாராளமான முதலீடுகளைச் செய்ய முடியும் என்பது பெருங்கேள்வியாகின்றது.

அதுமட்டுமன்றி, மாகாண சபைகள் முதலீடுகள் உள்ளிட்ட விடயங்களை கையாள்வதாக இருந்தால் அவை முதலில் செயற்றினைப் பெற வேண்டும். ஆனால் கடந்த ஐந்து வருடங்களுக்கும் அதிகமாக மாகாண சபைகள் இயக்கமின்றியே உள்ளன.

அந்த வகையில், முதலீடுகளை எதிர்பார்க்கும் ஜனாதிபதி ரணில் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றி அறிவித்திருக்க வேண்டும் ஆனால் அந்த அறிவிப்பைச்செய்;வதற்கு அவர் தயாராக இருக்கவில்லை.

இதனைவிடவும், புலம்பெயர் தமிழர்களின் பாதுகாப்பும் வடக்கு வாழ் தமிழ் மக்களின் பாதுகாப்பும் முக்கியமானது. ஒரு தனிநபருக்கு மூன்று படைவீரர்கள் என்ற அடிப்படையில் படைகளையும் புலனாய்வாளர்களையும் வடக்கில் குவித்து வைத்துக் கொண்டு முதலீடுகளை எதிர்பார்த்தால் அது எவ்வாறு சாத்தியமாகும். ஆகவே முதலில் படைகள் குறைக்கப்பட்டு அமைதியான சமாதானமான, சட்டம் ஒழுங்கு நடைமுறையில் உள்ள பகுதியாக வடக்கு மாற்றப்பட வேண்டும்.

அவ்வாறு மாற்றப்படுவதாக இருந்தால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறல் செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் நிவாரணமும் வழங்க வேண்டும். சம அந்தஸ்து வழங்கப்பட்டு பிரஜைகளாக மதிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தையும் செய்வதாக இருந்தால் இனப்பிரச்சினைக்கு நியாயமான முறையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்பட்டு வடக்கு மக்களின் பறிக்கப்பட்ட இறைமை மீள கையளிக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தச் செயற்பாடுகளையெல்லாம் செய்வதற்கு ஜனாதிபதி ரணிலுக்கு அரசியல் தற்துணிவு இருக்கின்றதா என்பது தான் இங்குள்ள பிரதான விடயம்.

ஏனென்றால் இதே ரணில் விக்கிரமசிங்க தான், 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்து விட்டு கடந்த சுதந்திர தினத்துக்குள் தீர்வு வழங்குவதாக கூறிவிட்டு, பின்னர் பௌத்த தேரர்கள் வீதிக்கு இறங்கியவுடன் மௌனித்துள்ளார்.

ஆக, ரணிலின் வடக்கு, விஜயம் முழுக்க முழுக்க அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான நாடி பிடித்துப்பார்ப்பதை இலக்காக கொண்டதோடு, தமிழர்களை வாய்மொழியால் வசப்படுத்துவதையே நோக்காக இருக்கின்றது அவ்வளவுதான்.



# சுடரி விருது விழா




## ஊடக மங்கைக்கான விருதினை வழங்கி கௌரவித்தது நமது ஈழநாடு

எம் தமிழ் சமுதாயத்தில் காலம்காலமாக இருந்து வரும் பல தடைகளையும் பெண்ணிற்கென வரையப்பட்ட அடிப்படைவாத வரையறைகளையும் கடந்து அதி நவீன கால ஓட்டத்திற்கேற்ப பொதுச்சேவையிலும் சமூக முன்னேற்ற செயற்பாடுகளிலும் தம்மை அர்பணித்து சமூதாயத்தின் ஆளுமைகளாகத் திகளும் ஒப்பற்ற சுடரிகள் பிரித்தானியாவில் கடந்த சனிக்கிழமை (27) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இதில் புலம்பெயர் தேசத்தில் ஊடகத்துறையில் மிளிரும் சாதனைப் பெண்களில் விருதுக்குழுவினரால் தேர்வு செய்யப்பட்ட திருமதி ரஜித்தா சாம்பிரதீப் என்பவருக்கு ஊடக மங்கை எனும் விருதினை நமது ஈழநாடு வழங்கி கௌரவித்தது. நமது ஈழநாட்டின் ஆசிரியர் பற்றிக் சுகிர்தன் இந்த விருதினை அவருக்கு வழங்கி கௌரவித்தார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திய ஆறாத வடு மற்றும் குடும்ப பொருளாதார நெருக்கடிகள் என அனைத்துப் பெரும் சுமைகளையும் தாங்கிக்கொண்டு புலம் பெயர்ந்த போதிலும்; அனைத்து சவால்களையும் எதிர் கொண்டு சாதனை நட்சத்திரங்களாக மிளிரும் பெண்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் பிரித்தானியா பெண்கள் அபிவிருத்தி மன்றம் நடாத்திய சுடரி விருது விழா இலண்டன் ஹரோ என்னும் இடத்தில் நேற்று மாலை நடை பெற்றது.

மிகவும் கோலாகலமாக நடைபெற்ற இந்த விருது விழாவில் அரசியல் மருத்துவம் கல்வி ஊடகம் வணிகம் அழகுக்கலை சமயற்கலை விளையாட்டு என பல் தரப்பட்ட துறைகளில் தமது ஆழுமைகளை வெளிக்காட்டி மிளிரும் ஆளுமைப்பெண்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இதில் பிரித்தானியாவின் உயர் விருதுகளில ஒன்றான Order of the British Empire (OBE) விருதினை தனதாக்கிக் கொண்ட கலாநிதி சபேசன் சிதம்பரநாதன் மற்றும்; ஹரோ கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர் Bob Blackman ஆகியோர் கொளரவ விருந்தினராக கலந்து கொண்டனர்.

புலம்பெயர் நாட்டில் பல்லின சமூக நெருக்கடிகளுக்கும் குடும்ப பொருளாதார நெருக்கடிகளுக்கும் ஏன் நேரம் என்ற அதி வேக கால ஓட்டத்திற்கு மத்தியிலும் குடும்பங்களைத் தாண்டி தான் சார்ந்த சமூகத்திற்காக பல் தரப்பட்ட தளங்களில் அவர்கள் பிரகாசித்து ஒளிருகிறார்கள்.

அந்தவகையில் பிரித்தானியாவில் சாதனைப் பெண்களாக மிளிரும் எம் தாய்த் தமிழ் பெண்களிற்கு சுடரிகள் எனும் விருது வழங்கி கொளரவிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. அவர்களை அடையாளப்படுத்தி அங்கீகரித்தது மட்டுமல்லாது புலம் பெயர் தேசத்தில் வாழும் எதிர்கால எம் தமிழ் சந்தியினரை இவ்வாறான சாதனை பயணங்களை நோக்கி ஊக்கமளிப்பதாகவும் அமைந்துள்ளது.

அதேநேரம் இந்த விழாவில் திரட்டப்படும் நிதி தாயகத்தில் உள்ள பெண் தலைமைத்துக குடும்பங்கள் மற்றும் போரின் வடுக்களால் பொருளாதார ரீதியில் சவால்களை எதிர் நோக்கும் பெண்களுக்கு அவர்களுக்கான வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பயன்படுத்தப்படும் என ஏற்பாட்டு குழுவினரால் அறிவிக்கப்பட்டமையும் வரவேற்கத்தக்கது.



படங்கள் : அனுஷன் பாலசுப்பிரமணியம்







# தேசிய தைப்பொங்கல் விழா 'நாடே சிரிக்க நடந்த கூத்து'

**பார்தீபன் சண்முகநாதன்**





மலையக வரலாற்றில் முதன் முறையாக, தேசிய தைப் பொங்கல் விழா ஹட்டனில் கடந்த 21ஆம் திகதி கோலாகலமாக இடம்பெற்று முடிந்தது. கலை, கலாசார நிகழ்வுகள், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள், போட்டிகள் என பிரமாண்டமான முறையில் ஏற்பாடுகள் செய்யப்படு, தேசிய தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஹட்டன் டன்பார் மைதானத்தில் நடைபெற்றது. 1,008 பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு, கோலப்போட்டி, சிலம்பாட்டம், தப்பாட்டம் என பல கலை, கலாசார அம்சங்களுடன் விழா நடைபெற்றது.

பல முக்கிய நிகழ்வுகளுடன் மிக பிரம்மாண்டமாக இடம்பெற்ற இந்த நிகழ்வு, வரலாற்று நிகழ்வாக பதிவாகியிருக்க வேண்டும். ஏன், மலையகத் தமிழர்களிடையே மாத்திரமல்ல, உலக வாழ் தமிழர்களிடையேயும் பேசுபொருளாக மாறியிருக்க வேண்டும். எனினும் இந்த தைப்பொங்கல் விழா பல்வேறு எதிர்மறையான விமர்சனங்களை மாத்திரமல்ல வாதப்பிரதிவாதங்களையும் தோற்றுவித்து. குறிப்பாக விழா நடந்த அன்றைய தினமே பேஸ்புக், இன்ஸ்டாகிராம் என சமூகவலைத்தளங்களில் இந்த நிகழ்வு குறித்த பல்வேறு கண்டனங்கள், எதிர்மாறான கருத்துகள் வெளியாகியிருந்தன. தென்னிந்திய திரைப்பட நடிகைகளான ஐஸ்வர்யா ராஜேஸ், சம்யுக்தா, மீனாக்சி, ஐஸ்வர்யா டட்டா ஆகியோர் பங்கேற்று இந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தமையே இந்த எதிர் மறை விமர்சனத்திற்கு காரணமாக அமைந்தது.

தைப்பொங்ல் எனப்படுவது, தமிழர் பண்டிகை மாத்திரமல்ல இது உழவர் பண்டிகையும்கூட. உலக உயிர்களின் பசியை போக்கும் விவசாயிகள், தமது விவசாயத்திற்கு உதவும் சூரியன் உள்ளிட்ட இயற்கைக்கு சக்திகளுக்கு நன்றி செலுத்தும் இந்த தினத்தை இன, மத, மொழி பேதமின்றி உலக மக்கள் அனைவரும் கொண்டாட இயலும் என்பதே இந்த பண்டிகையின் சிறப்பு. பொங்கல் என்பதற்கு ”பொங்கி வழிதல்”, ”பொங்குதல்” என்பது பொருள். புதிய பானையில் பால் பொங்கி எழுந்து பொங்கி வழிந்து வருவதால், எதிர் காலம் முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கிச் சிறக்கும் என்பதும், களனியெல்லாம் பெருகி, அறுவடை மென்மேலும் அதிகரிக்கும் என்பதும் இந்தப் பண்டிகையின் மேலோங்கிய தத்துவம், நம்பிக்கையும் அதுவே. சங்க காலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்து, தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்களாம்.

பொங்கல் விழாவுக்கு வந்த நடிகைகள் ஒரு வார்த்தையேனும் பொங்கலைப் பற்றியோ, மலையகத் தமிழர்களை பற்றியோ பேசவில்லை. மாறாக ஜீவன் புகழ் பாடினார்கள். ஆடிப்பாடினார்கள். அவர்களைச் சொல்லி குற்றமில்லை. காரணம் அவர்கள் வாங்கிய காசுக்கு கூவினார்கள் அவ்வளவே. அவர்களுக்கு மலையகமும் தெரியாது, மலையகத் தமிழர்களையும் தெரியாது.

“நாம் 200 நிகழ்வுக்கு வந்திருந்த இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனையோ ஏனைய அமைச்சர்களையோ மலையகத்துக்கு அழைத்து வராத இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையகம் பற்றி எந்தவிதமான அரசியல் புரிதல் அற்ற இந்திய நடிகைகளை மலையகத்துக்கு அழைத்து வந்திருப்பது ஏன்?” என இளைஞர் ஒருவர் பேஸ்புக்கில் கேள்வி எழுப்பியிருந்தார். உண்மையில் அவர் எழுப்பிய கேள்வியை பலரும் கடந்த காலத்திலும் எழுப்பியிருந்தார்கள். உண்மையில் நிர்மலா சீதாராமன் மலையகத்திற்கு அழைத்துவரப்பட்டிருந்தால் மலையகத் தமிழர்களின் வறுமையுடுடன் இரண்டறக் கலந்த வாழ்க்கை அம்பலமாகியிருக்கும். ஆகவேதான் இலங்கை அரசாங்கமும் சரி, தொழிலாளர் காங்கிரஸும் சரி தன்னுடைய படத்தை சுகதாச உள்ளக அரங்கில் மாத்திரம் ஓட்டியது. மலையகத்திற்கு வந்திருந்தால் 'ரீல்' அறுந்திருக்கும்.

எனினும் நடிகைகளை கூட்டி வந்து சொகுசு ஹோட்டல்களில் தங்க வைத்து, ஹட்டனில் கூட ஏசி போட்டு, பணத்தையும் அள்ளிக்கொடுத்து அவர்களை வழியனுப்பிவைக்க முடியும். காரணம் அவர்களுக்கு மலையகம், மக்கள் பற்றியெல்லாம் தெரியாது. அவர்களைப் பொறுத்தவரையில் இதுவொரு நிகழ்வு.

மலையகத் தமிழர்கள் எத்தனையோ சிரமங்களை நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்றார்கள். அந்த மக்களின் ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பளம் எட்டாக்கனியாக இருக்கிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடி அவர்களை மேலும் மோசமாக பாதித்துள்ளது. பாடசாலை இடைவிலகல் அதிகரித்துள்ளதாக அரசாங்க புள்ளிவிபரங்களே தெரிவிகின்றன. பாடசாலை இடைவிலகலுக்கு வறுமையும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

இலங்கையில் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களில் பெருந்தோட்ட மக்களே அதிகம் என ஐ.நா உணவுத் திட்டத்தின் 2023ஆம் ஆண்டுக்கான அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மூன்று வேளை உணவைப் பெற்றுக் கொள்ள சிரமப்படும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த பொங்கல் விழா இடம்பெற்ற ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலும் வாழ்கின்றனர். சுகாதாரம், போக்குவரத்து, கல்வி என இந்த மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. எனினும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய அந்த மக்களின் பிரதிநிதிகள் நடிகைகளை அழைத்து வந்து பொங்கல் விழா கொண்டாடுகிறார்கள்.

உண்மையில் தேசிய பொங்கல் விழா அவசியமான ஒன்றுதான் எனினும் அது எப்படி நடந்திருக்க வேண்டும்? தோட்டத் தொழிலாளிகளை கௌரவப் படுத்தும் வகையில், அவர்களும் விவசாயிகள் என்ற வகையில் சில நிகழ்வுகளை நடத்தியிருக்க முடியும். கீழே கைத்தட்டிக் கொண்டிருந்தவர்களை மேடையேற்றி அழகு பார்த்திருக்க முடியும். ஆயிரம் பானையில் பொங்கல் வைத்ததற்கு பதிலாக, பொருளாதார ரீதியாக நலிவுற்ற நிலையில் இருக்கும் ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கியிருக்க முடியும். நடிகைகளுக்கு செலவழித்த இலட்சங்களை, கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாது கஷ்டப்படும் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியிருக்க முடியும். மலையக மண்ணுக்காகவே பாடுபடும் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள் அவர்களை அழைத்து கௌரவித்திருக்கலாம்.

தேசிய பொங்கல் விழாவில் மிக நீண்டகாலமாக விடுக்கப்படும் கோரிக்கையான, மலையகத் தமிழ் மக்களையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஒரு தீர்மானமாக நிறைவேற்றியிருக்கலாம். இன்னும் எத்தனையோ நல்லப் பணிகளை செய்து இந்த பொங்கல் விழாவை சிறப்பித்திருக்கலாம். எனினும் கூத்தும், கும்மாளமுமாக நிறைவடைந்துள்ளது தேசிய பொங்கல் விழா.

முன்னதாக நாம் 200 நிகழ்விலும் பல்வேறு சொதப்பல்கள், தவறுகளால் எதிர்மறையான விமர்சனங்களை சந்தித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்களும் பிழைகளைத் திருத்திக்கொண்டு சரியான பாதையில் பயணிப்பார்கள் எனப் பார்த்தால் மீண்டும் மீண்டும் அதே தவறை செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே பொது மக்களின் கருத்தாக அமைந்துள்ளது. இந்த நிலை தொடரும் பட்சத்தில் எதிர் வரும் தேர்தலில் மக்கள் இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

# சிறிலங்கா வலிந்து இழுக்கும் வம்பு

**பூமிகன்**

இஸ்ரேல், பலஸ்தீன் மீது தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்காவும் ஹமாஸ் இயக்கத்தினர் பலஸ்தீனின் விடுதலையை மையப்படுத்துவதற்காவும் இருதரப்பினருக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட போர் தற்போதும் நீடித்து வருகிறது.

இந்தப்போரில் இரு நாடுகளிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அங்கு வாழும் மக்கள் பதற்றமான சூழலில் உள்ளனர். தமது உயிர்கள் எப்போது காவு கொள்ளப்படும் என்ற அச்சத்தில் உள்ளது.

இந்தப்போரின் பிரதிபலிப்புக்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன. குறிப்பாக பலிஸ்தீனர்களுக்கு அதரவாக ஜனநாயக போராட்டங்கள் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனாலும், இதுவரையில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் தொடர்பில் எவ்விதமான கட்டுப்படுத்தும் தீர்மானங்களை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் முன்னெடுக்கவில்லை. மாறாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போரை அத்தரப்புக்கள் ஆதரிக்கும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றன.



இந்நிலையில், ஈரான் ஆதரவு ஏமன் நாட்டை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள், பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அண்மையில் பகிரங்க அறிப்பைச் செய்தனர். இவர்கள் நேரடியாக போர்க்களத்தில் களமிறங்க போராட்டத்தில் குதிக்கப்போகின்றார்களா என்ற கேள்விகள் வலுத்தன.

ஆனாலும் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் மூலோபாயம் வேறுவிதமாக இருந்தது. அவர்கள் செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேலுக்குச் செல்லும் போர் மற்றும் சரக்கு கப்பல்களில் ஆரம்பத்தில் தாக்குதல்களை தொடுத்தனர்.

பின்னர், இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ள நாடுகளில் இருந்து வரும் சரக்கு கப்பல்கள் மீதும் தொடர் தாக்குதல்களைச் செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்தனர்.

இப்பின்னணியில் தற்போது, செங்கடலில் கப்பல்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால், ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குறிப்பிடப்படாத விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்கா தலைமையிலான 12 நாடுகள் கூட்டாக எச்சரித்துள்ளன.

இதுதொடர்பாக வெள்ளைமாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'எங்கள் செய்தி இப்போது தெளிவாக இருக்கிறது. இந்த சட்டவிரோத தாக்குதல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவும், சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பல்கள் மற்றும் பணியாளர்களை விடுவிக்க வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம் என்றும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, செங்கடல் பகுதிகளில் அமெரிக்க இராணுவத்தின் போர் கப்பல்கள், தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறன. கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க தரப்பினர், 'தெற்கு செங்கடல் பகுதியில் பயணிக்கும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். ஏவுகணைகளை வீசி வருகின்றனர். அதனை அமெரிக்க இராணுவம் கடலிலேயே தகர்த்து அழித்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இதுவரை 24 முறை செங்கடலில் செல்லும் கப்பல்களை தகர்க்க ஹவுதி கிளர்ச்சியாளர்கள் முயற்சி செய்தனர். இருப்பினும் பலி எண்ணிக்கை ஏதுமின்றி தாக்குதலை சமாளித்து வருகிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான், சிறிலங்கா, செங்கடலில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு, பதிலடி நடவடிக்;கைகளில் ஈடுபட்டு வருகின்ற அமெரிக்கா தலைமையிலான 'புரொஸ்பெரற்றி காடியன் (Pசழளிநச வைல புரயசனயைn)' என்ற கூட்டு நடவடிக்கைகயில் பங்கேற்பதற்கு தீர்மானித்திருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செங்கடல் ஊடாக சிறிவங்கா வரும் சரக்கு கப்பல்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலானால் கொழும்பு துறைமுகம் உட்பட நாட்டின் அனைத்து துறைமுகங்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, இறக்குமதி பொருட்களின் விலை அதிகரித்து விடுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே சர்வதேச சரக்கு கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக செங்கடலுக்கு சிறிலங்கா கடற்படையின் போர் கப்பலை அனுப்புகின்றோம், மாறாக இரு நாட்டின் போரில் பங்குதாரர்களாக அல்ல என்றும் கூறியுள்ளார்.

இந்தக் கூற்றுக்கு அமைவாக, ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் கூட்டு நடவடிக்கையில் சிறிலங்கா கடற்படையும், போர்க்கப்பலும் விரைவில் இணைக்கப்படவுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர், கப்டன் கயான் விக்ரமசூரிய உறுதிப்படுத்தியுள்ளார்.

செங்கடலை அண்மித்த அரபுக்கடல், கல்ஃஃப் கடல் உள்ளிட்ட பிராந்தியம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அமெரிக்க தலைமையிலான கூட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அதில் சிறிலங்கா முக்கியமான பங்களிப்பைச் செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக சிறிலங்கா கடற்படைக்கு 250மில்லியன் ரூபா செலவு ஏற்படப்போகின்றது. இந்த செலவீனங்கள் பொருளாதார ரீதியாக தள்ளாடிக்கொண்டிருக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு மேலதிக செலவாகும்.

அதுமட்டுமன்றி, இந்த ஆண்டு முதல் வற்வரியை 18சதவீதமாக்கியமையால் பொதுமக்கள் வரிச்சுமைக்குள் இருக்கத்தக்கதாக உலக நாடுகளின் முரண்பாடுகளுக்குள் முண்டுகொடுப்பதற்கு செல்வது வேண்டாத நடவடிக்கையாகும்.

அதுமட்டுமன்றி, கூட்டு நடவடிக்கையின் ஆரம்பச் செலவீனம் தான் 250மில்லியனாக காணப்படுகின்ற நிலையில், அந்த நடவடிக்கை தொடர்ந்தால் அத்தொகை மேலும் அதிகரிப்பதற்கான நிலைமைகளே காணப்படுகின்றன.

அவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றபோது அதனை ஈடு செய்வதற்கு எவ்விதமான உபாயத்தை சிறிலங்கா அரசாங்கம் கொண்டிருக்கின்றது என்பது பற்றிய தகவல்கள் ஏதுமில்லை. முன்கூட்டிய திட்டங்களும் ஏதுமில்லை.

சிறிலங்கா அரசாங்கம் தற்போது, செங்கல் கடற்பாதையை தவிர்த்து தென்னாபிரிக்க கடற்பரப்பின் ஊடான சர்வதேச கடற்பாதையை பயன்படுத்தவதற்கும் போர்க்கொடி தூக்கியுள்ளது. அதற்கான செலவீனங்கள் அதிகரிக்கும் என்றும் அதனால் உள்நாட்டில் நெருக்கடிகள் அதிகரிக்கும் என்றும் குறிப்பிடுகின்றது.

எவ்வாறாயினம், செங்கடலுக்கு கடற்படையை அனுப்பும் செயற்பாடானது, அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு ஆதரவாக காணப்படுகின்றதோடு அச்செயற்பாடு மறைமுகமாக பலஸ்தீனுக்கு எதிரானது என்றும், இஸ்ரேலுக்கு ஆதரவானது என்றும் சிறிலங்காவில் உள்ள முஸ்லிம் தலைமைகள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

குறிப்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இதனை கடுமையாக விமர்சித்ததோடு, பலஸ்தீனுக்கு ஆதரவாக சிறிலங்கா செயற்படுவதாக கூறிவருகின்றமையானது பொய்யான பிரசாரம் என்றும் விமர்சித்துள்ளார்.

இவ்வாறான நிலைமைகளை விடவும், சிறிலங்கா அரசாங்காமானது, இதுகால வரையிலும் தாம் அணிசேராக் கொள்கையினையே பின்பற்றி வருவதாக அறிவித்து வந்திருக்கின்றது.

குறிப்பாக, உக்ரேன், ரஷ்ய போரில் கூடசிறிலங்கா அரசாங்கம் மௌனமாகவே இருந்தது. எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடுவதைக்கூட தவிர்த்து வந்தது.

ஆனால், செங்கடலுக்கு கடற்படைக் கப்பல்களை அனுப்பும் தீர்மானத்தின் ஊடாக சிறிலங்கா தனது அணிசேராக் கொள்கையிலிருந்து விலகியுள்ளமை அம்பலமாக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, செங்கடல் விவகாரத்தில் சிறிலங்கா பங்களிப்புச் செய்வதன் ஊடாக மற்றுமொரு இலக்கை அடைவதற்கு முயற்சிக்கின்றது.

அதாவது, சிறிலங்கா படைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினை பயங்கரவாத குழுவாக சித்தரித்து அதற்கு எதிராக முன்னெடுத்த நடவடிக்கைகள் நியாயமானவை தான் என்று மேற்குலகத்தினை ஏற்றுக் கொள்ளச் செய்வதுமாகும்.

அத்தோடு, செங்கடல் கூட்டு நடவடிக்கையில் பங்கெடுத்து ஹவுதி கிளர்ச்சியாளார்களை கட்டுப்படுத்துவதன் ஊடாக சிறிலங்கா படைகளுக்கு மற்றுமொரு சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

இதன் மூலமாக சிறிலங்கா படைகள் மீது காணப்படுகின்ற திட்டமிட்ட இனவழிப்பு குற்றச்சாட்டை களைவதோடு, சிறிலங்கா படைகள் சர்வதேச தரமிக்கவை என்ற அடையாளத்தை பெற்றுக்கொள்வதுமாகும்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய தீர்மானது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக கூட்டாளிகளின் ஆதரவினை உறுதிப்படுத்துவதுமாகும்.

ஆனால், ஹவுதி செய்தித் தொடர்பாளர் யஹ்யா சரேயா,அண்மையில் வெளியிட்ட அறிவிப்பில், தமது தாக்குதல் நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட கூட்டு நடவடிக்கைகளுக்க உதவும் நாடுகள் அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டுள்ள ஒருநாடாக இருக்கையில், செங்கடலில் அமெரிக்காவின் கூட்டு நடவடிக்கையுடன் இணைந்து கொள்வதால் வேண்டாத அச்சுறுத்தலை விலைக்கு வாங்கும் நிலைமைகள் தான் அதிகரிக்கப்போகின்றது.

இதனால், சிறிலங்காவின் உள்நாட்டு நிலைமைகள் மேலும் பற்றத்துக்குள்ளாகும் ஆபத்துக்களே உள்ளன. ஆகவே சிறிலங்காவின் உலகம் சார்ந்த கரிசனை தற்போது வேண்டாத வம்மை விலைக்கு வாங்கியத்துக்கு நிகராகியிருக்கின்றது.










நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டம் இம்முறை மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த வாழ்வாதார உதவி தேவைப்படும் போராளி, மாவீரர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 32 குடும்பங்களிற்கு உதவிகளை வழங்கியது.

மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு நமது ஈழநாடு உதவித்திட்டத்திடம் விடுத்த வேண்டுகோளிற்கிணங்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் செயற்பாட்டாளர் முஹமட் இஷாத் என்பவரின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டது.

அந்தவகையில் மாவீரர் பெற்றோர் குடும்பம் ஒன்றிற்கு அவர்களின் வாழ்வாதார உதவியை மேம்படுத்தும் வகையில் ஆடு வளர்ப்பிற்கான இரு ஆடுகள் வழங்கப்பட்டதுடன் மேற்படி தெரிவு செய்யப்பட்ட 32 குடும்பங்களிற்கு அத்தியவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளும்; விடுதியில் தங்கி கல்வி கற்கும் மாணவர்கள் 30 பேருக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.


















